“உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு”
ஆமோஸ் 4:12

தேவ எக்காளம்

“துக்கப் பாரத்தால் இளைத்து
நொந்து போனாயோ?
இயேசு உன்னைத் தேற்றிக்கொள்வார்
வாராயோ?”

“அவரைப் பின்பற்றினோர்க்கு
துன்பம் மாறுமோ?
சாவின் கூரும் மாறிப்போகும்
போதாதோ?”

“பாவியேனை ஏற்றுக்கொள்ள
மாட்டேன் என்பாரோ?
விண், மண் ஒழிந்தாலும் உன்னைத்
தள்ளாரே?”

l. 11 அக்டோபர் 1979 No. 10

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பின்மாற்றக்காரர் (BACK SLIDERS) ஓர் பயங்கர வகுப்பினர்.

"பூமியின் கீழே தேவனது சுவிசேஷத்தினுல் மீண்டும் தே... வியலாத மிகப்பயங்கர வகுப்பினர் பின்மாற்றக்காரராவார்" என்... ஆஸ்வால்ட் சேம்பர்ஸ் கூறியுள்ளார். இப்படிக் கூறியவர் மிக... அனுபவ முதிர்ச்சியுள்ள தேவபக்தனும், தேவஅன்பில் தொடர்... நிலைத்திருப்பவரும், ஊக்கமாக ஜெபிக்கும் ஜெபமாந்தனுமா... "இருப்பினும் நாம் அவர்களைச் சந்தித்தல் வேண்டும்" என்... அவர் தொடர்ந்து கூறுகின்றார்.

பின்மாற்றக்காரரைப்பற்றிய தேவ தீர்மானம் என்னவெ... அவர்கள் தாங்களாகவே திரும்பித் தேவனண்டை வருதல் வேண்... டும் என்கின்றார் சேம்பர்ஸ். பின்மாற்றக்காரர் தாங்களே இ... உணருதல் அவசியமாகும். கெட்டகுமாரனின் உவமை... இதற்கு ஆதாரமாக சேம்பர்ஸ் பயன்படுத்துகின்றார்.

கெட்டகுமாரன் தேவனுல் இழுத்துக்கொள்ளப்படவில்லை. அ... னுடைய வாழ்வில் எவ்வித தேவகிருபைகளுமே அருளப்படவில்... அவனுக்கு எவ்வித உதவியும் கொடுக்கப்படவில்லை. அவ... தந்தையின் வீட்டிலிருந்து எந்தவிதமான செய்தியும் கிடையாது.

பின்மாற்றக்காரன் முதலாவது எழுந்திருத்தல் வேண்டு... தான் மேய்த்துக்கொண்டிருக்கின்ற பன்றிகளையும், அவைகள் தின்... கொண்டிருக்கின்ற கீழான தவிட்டையும் விட்டுவிட்டுப் புறப்பட... வேண்டும். எங்கிருந்து அவன் முதலில் புறப்பட்டானே அந்த இ... திற்கே அவன் திரும்பிப்போய்ச் சேரவேண்டும்.

பின்மாற்றம் அடைந்துள்ள சகோதரனே, சகோதரியே ஆ... டவர் இயேசுவண்டைத் திரும்பிவந்து ஆண்டவரே, உமது சி... வுளச்சித்தத்திற்கு எதிரான காரியங்களை நான் என் விருப்பப்ப... செய்தமையால் உமது அன்பின் ஐக்கிய நிலையிலிருந்து வி... துரோகியானேன். மீண்டும் தயவாக என்னை அங்கீகரித்தரு... நேசா" என்று மிகவும் மனஉருக்கத்தோடும், நொறுங்குண்ட... ளத்தோடும் நீ மன்றாடல் வேண்டும்.

கெட்டகுமாரன் மிகவும் நொறுங்குண்ட மனதுடன் தாழ்... தோடு தன் தந்தையிடம் உள்ள நிறைவான ஆனந்தபாக்கியங்... எண்ணி எழுந்து புறப்பட்டுச் சென்றதைப்போல நீயும் முதற்கா... மாகப் புறப்பட்டு ஆண்டவரிடம் செல்.

கர்த்தருக்குள் பிரியமானவர்களே,

தம்முடைய விலைமதிப்பிட முடியாத பரிசுத்த இரத்தத்தை முழுவதுமாகச் சிந்தி நம்மைத் தம்முடைய சொந்த சம்பத்தாகச் சேர்த்துக்கொண்ட நமது அருமை இரட்சகர் இயேசுவின் இனிய நாமத்தில் உங்களுக்கு என் அன்பான வாழ்த்துக்கள்.

பண்டிதர் ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித் என்ற தேவமனிதர் எழுதிய புத்தகம் ஒன்றை நான் சமீபத்தில் வாசித்துக்கொண்டிருந்த போது அவர் அப்புத்தகத்தில் ஓரிடத்தில் எழுப்பியிருந்த ஒரு கருத்து நிறைந்த கேள்வி என் உள்ளத்தை வெகு ஆழமாகத் தொட்டு நின்றது. "இப்புத்தகத்தை வாசிப்போனே, இன்னும் நூறு வருடங்களுக்குள்ளாக நாம் அனைவரும் முடிவில்லா நித்தியத்திற்குள் கடந்து சென்றிருப்போம். அப்பொழுது, உனது நித்தியம் மோட்சத்திலா அல்லது எரிநரகிலா எங்கு செலவிடப்படும்?" என்பதே அவருடைய கேள்வியாகும். இன்னும் 100 ஆண்டு காலம் இவ்வுலகம் நிலைநிற்குமா? இல்லவே இல்லை. ஆயினும், நித்தியத்தைக்குறித்த உண்மையை நம்மில் தெளிவுபடுத்தவும், நமது நிலையாமையை நாம் பூரணமாக விளங்கிக்கொள்ளவும் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

2079-ஆம் ஆண்டில் நாம் அனைவரும் காலங்காட்டும் கடிகாரமற்ற முடிவில்லா, யுகா யுகத்தினுள் பிரவேசித்திருப்போம். நம்முடைய வாழ்வு நித்தியத்தில் ஆரம்பமாகியிருக்கும். நம்மில் அநேகர் கர்த்தருடைய பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து அவருடைய பரிசுத்த ராஜ்யத்தில் பரம சேனையின் திரள் கூட்டத்தினரோடு சேர்ந்து ஆட்டுக்குட்டியானவராகிய நமது அருமை நேசரை ஸ்தோத்திரித்துக் கொண்டிருப்போம். நம்முடைய கண்ணீர், கவலை, பாடு, நோவு, சஞ்சலம், வியாகுலம் அனைத்தையும் அன்பின் கர்த்தர் துடைத்திருப்பார்.

மோட்சத்தைச் சென்றடைந்த நாம் "ஐயோ, நான் எனது அன்பின் ஆண்டவருக்காகப் பூவுலகில் எவ்வளவோ செய்திருக்கலாமே! அவர் என்னில் கிருபையாக அன்புகூர்ந்து எனக்காக எத்தனை, எத்தனையோ மாட்சிமைச் செயல்களைப் பரலோகத்தில் செய்கின்றாரே! என்னிடம் வந்த எத்தனையோ அருமையான சந்தர்ப்பங்களையெல்லாம் நான் தவறவிட்டுவிட்டேனே. அழிந்துபோகும் ஆத்துமாக்களின் மீட்புக்காக நான் எவ்வளவோ தொண்டாற்றியிருக்கலாமே. ஐயோ, நான் எவ்வளவு மதியீனமாக, ஆத்தும வாஞ்சையற்று என் வாழ்நாளை வீணைகச் செலவிட்டுவிட்டேனே!" என்று நிச்சயமாகத் துயரடைவோம்.

ஆண்டவரை முழுமனதுடன் நேசிப்போரெல்லாம் அழியும் மக்குலத்திற்காகக் கவலைப்படாமல் இருக்கவே முடியாது. ஒரு மனிதனின் வாழ்வில் ஆத்தும வாஞ்சையும், ஆத்தும ஆதாயப்

பணியும் இல்லையெனில் அவன் ஆண்டவரை முற்றுமாக நேசிக்கவில்லை, அவரில் அவன் அன்புகூரவில்லை என்பதை அது திட்டம் தெளிவாகக் காண்பிக்கும்.

வட இந்தியாவின் சிற்சில மாநிலங்களில் கிராமம், கிராமமாக சுவிசேஷத்தை எடுத்துக்கொண்டு செல்லும்பாக்கியத்தை அன்பின் கர்த்தர் கிருபையாக எனக்கு அருளினபடியால் அடிக்கடி இந்திய நாட்டின் மாபெரும் சுவிசேஷத் தேவையை என் கண்முன்பாக கண்டு பெரிதும் துயரமடைகின்றேன். சில சமயங்களில் வட இந்தியாவைக்குறித்த எனது இதயபாரம் கட்டுக்குமீறிச் சென்றுவிடுகையில் இந்திய தேசப் படத்தை எனக்கு முன்பாக விரித்துவைத்து முகங்குப்புற விழுந்து, கண்ணீர் சிந்தி, தேவன் கிருபையாய் நாட்டைச் சந்திக்கும்படி அழுகின்றேன். இதை எழுதுகையிலும் கண்ணீர் என் கண்களில் தேங்குகின்றது. இப்படி நம்மைச் செய்ய ஏவுவது என்ன? தேவ அன்பு. இந்த அன்பு நமக்கு எங்கிருந்து வந்தது? நமது கன்மலையாகிய கர்த்தரிடமிருந்து இதனை நாம் பெற்றுக்கொண்டோம். "அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறடிக்கப்பட்டவர்களுமாய் இருந்தபடியால் அவர்கள்மேல் மனதுருகினர் (He was moved with compassion)"(மத். 9:36) என்று நாம் பார்க்கின்றோம்.

நாம் ஆண்டவரில் அன்புகூர்ந்தால் அவருடைய ஆடுகளை நாம் மேய்ப்போம். (யோ. 21:17) ஆத்தும ஆதாயப்பணியே நமது வாழ்வின் இலட்சியமும், குறிக்கோளுமாகவிருக்கும். "இவ்வுலகத்தின் அனைத்துத் துயரங்களும், இவ்வுலகத்தில் தோன்றிய மாந்தர் யாவரும் வடித்த கண்ணீர் யாவும், உலக மகாயுத்தங்களால் உண்டான வேதனைகள் அனைத்தும், எண்ணிக்கைக்கடங்கா உடைந்த உள்ளங்களிலிருந்து எழும்பிய துயரப் பெருமூச்சுகளின் கதறல்கள் யாவும் ஒன்று சேர்ந்தாலும் நஷ்டப்பட்ட ஒரு ஆத்துமா நரக அக்கினியிலிருந்து எழுப்பும் ஒரு மா பயங்கர ஏக்கத்தின் கதறலுக்கு ஈடுகொடுக்க முடியாது" என்று ஆரம்பத்தில் குறிப்பிட்ட தேவபக்தன் கூறுகின்றார். எத்தனை உண்மை! நஷ்டப்பட்டுப் போன ஒரு ஆத்துமா எத்தனை பெரியதோர் தேவ கோபாக்கினையின் உக்கிரகத்தை அனுபவிக்க வேண்டியதாயிருக்குமென்று எண்ணுகின்றீர்கள்? "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபி. 10:31) இதைக் குறித்த தெளிவான தரிசனத்தைக் கர்த்தர்தாமே நமக்குத் தந்தருள்வாராக. ஆமென்.

அன்புள்ள ஆண்டவருடைய பிள்ளையே, அழிந்துபோகும் ஆத்துமாக்களின் மீட்புக்கென்று நீ இதுவரை செய்தது யாது? இதுகாறும் பரியந்தம் நீ எத்தனை பேர்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தி

திருக்கின்றாய்? "தெருக்களிலே மக்கள் கூட்டங்களைக் காணுகை யில் உன் உள்ளம் அவர்களுக்காக உருகுகின்றதா? அவர்கள் எல் லாரும் நித்திய நரகத் தீயைநோக்கி விரைந்துகொண்டிருக்கின்றார் கள் என்பதை நீ எண்ணிப்பார்ப்பதில்லையா? அந்த ஆத்தும பாரம் உனக்கில்லையெனில், ஆண்டவரிடம் ஆத்துமாக்களைப்பெற்றிய பாரத்தை உனக்குத் தரும்படி கேள்" என்று ஆலன் ரெட்பாத் (Alan Redpath) என்ற பக்தன் கூறுகின்றார்.

ஜனக்கூட்டம் நிறைந்த பொது இடங்களில் தேவசெய்தியைக் கொடுக்க உனக்குக் கூடாதிருக்கலாம். கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரசங்கிக்கக்கூடிய பெரிய கிருபை வரங்கள் உனக்கில்லாதிருக்க லாம். அதைப்பற்றிப் பரவாயில்லை. ஆனால், அன்பின் ஆண்டவர் உன் வாழ்க்கையில் நடப்பித்த அற்புத அதிசயச் செயல்களையும், பலியாக ஒருகாலத்தில் ஜீவித்தஉன்னைத் தமது கல்வாரி அன்பால் மீட்டு இரட்சித்து உன் உள்ளத்தில் பரிபூரண சமாதானத்தை அளித்து உன்னோடு எப்பொழுதும் வாசம் செய்கிற அதிசய நேசர் இயேசுவை நீ தனித்து சந்திக்கிற ஆத்துமாக்களிடம் தாராளமாக கூறலாம் அல்லவா? நீ அதிகமாக நேசிக்கின்ற உனது குடும்பத் தின் மக்கள், உடன் பிறந்தோர், உனக்கு அருமையானவர்களின் பெயர்களை ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதிவைத்து அவர்கள் மனந்திரும்புதலுக்காக உருக்கமாக நீ ஜெபிக்கலாம். பரிசுத்த பட்டி பண்டிதை ராமாபாய் அம்மையார் தனது வேத புத்தகத்தி லுள்ள காலியான வெள்ளைத்தாட்களில் 2000 பேர்களின் பெயர்களை இவ்வாறு எழுதிவைத்து ஜெபித்திருக்கின்றார்கள். சாது சுந்தர்சிங் கும் தனக்கு அருமையானவர்களின் பெயர்களை எழுதிவைத்துத் தமது இமயமலை சுவிசேஷப்பயண நாட்களில் ஜெபித்திருக்கின்றார். இப்படி நாம் ஆத்துமாக்களுக்காகச் செய்யும் காரியங்கள் எல்லாம் மோட்சத்தில் பெரிய பலனைப் பெறும. இதில் கைப்பிரதி ஊழியம் (Tracts' Ministry) ஒன்றுள்ளது. இது மிகவும் கனிகொடுக்கக் கூடியஊழியம். ஜெபத்தோடு இதனை நாம் செய்வோமாயின் அநேக ஆத்துமாக்களை ஆண்டவருக்கென்று ஆதாயம் செய்யலாம். துண் டுப் பிரதிகளை விநியோகித்து ஊழியம் செய்வதுபற்றிப் பக்தன் R. A. Torrey அவர்கள் எழுதிய அருமையான செய்தி ஒன்றை மொழிமாற்றம்செய்து இந்த இதழில் எழுதியுள்ளேன். தயவுசெய்து ஜெபத்தோடு வாசித்து ஆத்தும ஆதாயப் பணியில் உடனே செயல்படுத்துங்கள்.

எப்படியாகிலும் நாம் இவ்வுலகத்தை விட்டுக் கடந்து உன் னத வீட்டினுள் பிரவேசித்து நமது கண்மணியாம் இயேசுவைச் சந்திக்கையில் கைநிறைந்த ஆத்துமாக்களோடு அவரது ஜோதி முகத்தைத் தரிசிக்கவேண்டும். அப்படித்தானே! அல்லேலூயா. இவ்வுலகத்து மக்கள் மகா ஞானத்தோடும், கவலையோடும், கருத்

தோடும், விவேகத்தோடும் இராப்பகலாகப் பாடுபட்டு ஐசுவரியத்தை ரகசியமாகச் சேர்த்து வாழ்க்கையை வளப்படுத்துகின்றனர். லோகத்தை ஆதாயம் பண்ணுகின்றனர். தங்களின் பின் சந்ததிக்குப் பொக்கிஷங்களைச் சேர்க்கின்றனர். ஆனால், நமது கண்ணும், கருத்துமான ஒரே ஆவல் அழிந்துபோகும் மனுக்குலத்தை அருமை நேசருக்கு ஆதாயப்படுத்துவதன் மூலம் பரலோகத்தில் நமது பொக்கிஷத்தைச் சேர்ப்பதாக இருக்கட்டும். நம்முடைய பொக்கிஷத்தைப் பரலோகத்தில் மாத்திரம் சேர்ப்போம் (மத். 6:19,20) இப்படி நாம் செய்யத் தீர்மானித்தது எத்தனை, எத்தனை மாட்சிமையானதோர் ஆசீர்வாதமான பலனைத் தந்திருக்கின்றது என்பதை மோட்சத்தில் நாம் கண்டு களிகூர்ந்து அகமகிழ்வோம்.

டோனாவூர் நட்சத்திரக் கூட்டத்தைத் தோற்றுவித்த ஏமி கார்மிக்கேல் என்ற பரிசுத்தவாட்டி ஆரம்ப நாட்களில் அழியும் ஆத்துமாக்களைக் குறித்த ஆத்மபாரம் அற்றவர்களாக ஜீவித்தார்களாம். இந்நாட்களில் ஒருநாள் அவர்கள் ஒரு சொப்பனம் கண்டார்களாம். அதாவது, தான் மரித்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதைப்போலவும், அருமை ஆண்டவர் இயேசு பரலோகில் பிரவேசித்திருந்த தம்முடைய ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஒரு பொற்கிரீடத்தை அளித்ததாகவும், மற்றவர்களுக்கு அளிக்கப்பட்ட கிரீடங்களில் ஜொலிக்கும் முத்துக்களிருப்பதையும் தனது கிரீடத்தில் எவ்வித முத்துக்களும் இல்லையென்று கண்ட அம்மையார் ஆண்டவரை அணுகி தன் கிரீடத்தில் முத்துக்கள் இல்லையே என்று துக்கத்துடன் வினவினார்களாம். அதற்குக் கர்த்தர் "என் அருமைப் பிள்ளையே, பூவுலகில் ஜீவித்த காலத்தில் ஆத்துமாக்களுக்காகக் கவலைப்பட்டு, அவர்கள் இரட்சிப்புக்காக அரும்பாடுபட்டுழைத்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்தபடியாலேயே மற்றவர்கள் கிரீடங்களில் முத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், நீ பூமியிலிருந்த காலத்தில் ஆத்தும ஆதாயம் செய்யாமல் நிர்விசாரமாக ஜீவித்து நீ பெற்ற இரட்சிப்பின் சந்தோஷத்தை உன்னளவில் அனுபவித்து மற்றவர்களுக்கு அதினைப் பகிர்ந்து கொள்ளாதபடியால் உன் கிரீடம் முத்துக்களின்றி வெறுமையாய் இருக்கின்றது" என்று கூறினாராம். இதைக் கேட்டதும் அம்மையார் அடைந்த துக்கத்திற்கு அளவே இல்லையாம். திடீரென்று கண்விழித்தபோது, தான் கண்டது வெறும் சொப்பனம்தான் என்றும், தான் இன்னும் இப்பூவுலகிலேயேதானிருப்பதையும் அறிந்து வெகு ஆனந்தம் கொண்டு அந்த நாளிலிருந்து ஆத்துமாக்களை ஆண்டவரண்டை வழிநடத்த ஆரம்பித்து அநேகரை கர்த்தருடைய இரட்சிப்பின் சந்தோஷத்திற்குள் வழிநடத்தினார்களாம். மேற்குறிப்பிட்ட பரிசுத்தவாட்டியின் அனுபவம் கட்டாயம் நமது சொந்த அனுபவமாயிருப்பதாக. நமது கல்வி, தாலந்துகள், ஆஸ்தி, ஐசுவரியம், ஜீவன், சுகம், பெலன் யாவற்றையும் அக்கினியும், கந்தகமும் கலந்து எரியும் அவியாத

நித்திய தீச்சூளைக்கு நேராகச் சென்றுமடியத் தீவிரிக்கும் ஆத்துமாக்களைத் தடுத்து நிறுத்தி ஆண்டவர் இயேசுவின் பொற்பாதங்களண்டை அவர்களை வழிநடத்துவதில் நாம் செலவிடுவோம்.

அதற்குரிய மேன்மையான பலனை நம் அன்பின் இயேசு இரட்சகர் மோட்ச வீட்டில் நமக்குத் தப்பாமல் தந்தருள்வார். ஆமென்.

"......... ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்." (நீதி. 11:30)

"......அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள்." (தானி. 12:3)

"கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்." (சங். 126:5)

கர்த்தர் வருகிறார். N. சாமுவேல்

நம் தேவன் நல்ல தேவன்.

எல்லா நாமங்களுக்கும் மேலான இயேசுகிறிஸ்து என்னும் நித்திய நாமத்தினால் தேவ எக்காள வாசகர்களுக்கு என் அன்பின் வாழ்த்துதல்களைக் கூறிக்கொண்டு, கவனமாய் ஜெபசிந்தையோடு, பக்தி வைராக்கியத்தோடு தேவ ஆலோசனைகளுக்கு நீங்கள் செவிகொடுக்கவேண்டுமென்று இரு கரங்கூப்பி உங்களை அன்போடு கேட்கின்றேன். நித்தியஜீவனைக் கொடுப்பேன் என்று வாக்கருளின இயேசுகிறிஸ்துவானவர் இன்றைக்கு உங்களோடு பேசுவாராக.

இயேசுகிறிஸ்து நல்லவர்:

சுத்த இருதயமுள்ளவர்களுக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார். (சங். 73:1) என்பதை நாள்தோறும் கண்டு தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன். 1965-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இயேசுகிறிஸ்துவைத் தரிசித்து பாவமன்னிப்பாகிய மீட்பையும், மனமாற்றத்தையும் பெற்றுக்கொண்டது முதல் இத்தனை ஆண்டுகளாக இயேசுகிறிஸ்து எப்போதும் நல்லவராகவே இருக்கிறார். அன்பின் நேசரோடு பழகியதில் நான் கண்டறிந்த உண்மை யாதெனில் "நல்ல தேவன் எல்லாவற்றையும் நமது நன்மைக்காகவே செய்கிறார்" என்பதுதான். ஆமாம். எல்லாம் நன்மைக்கே. எல்லாம் அவர் கிருபையே. எல்லாம் அவர் செயலே. எல்லாம் அவர் மகிமைக்கே. இஸ்ரவேல் ஜனங்கள் "கர்த்தர் நல்லவர் ......அவர் கிருபைஎன்றுமுள்ளது" என்றுதான் துதித்தார்கள். துதிக்கிறார்கள். நாமும் அப்படியே துதிக்கக்கடவோம்.

இயேசுகிறிஸ்து முன்குறிக்கிறார்:

இந்தச் செய்தியை ஓர் சாட்சியாகவே நான் எழுதும்படி வழி நடத்தப்படுகிறேன். குறிப்பாக இயேசுகிறிஸ்துவோடு வாழும்படி பரலோகத்திற்கு செப்டம்பர் மாதம் 5–ம் தேதி தேவதூதர்களோடு சென்றுவிட்ட என் அன்புத் தாயாரைப்பற்றியசாட்சியே இச்செய்தி. நான் என் தாயின் கர்ப்பத்தில் உருவாவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்னமே என்னைக்குறித்து என் நேசதாயாருக்கு கர்த்தர் தரிசனம் கொடுத்திருக்கிறார். அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறவர் அல்லவா? இன்று நான்ஒரு கிறிஸ்துவின் ஊழியக்காரன். சங்கீதம் 119:19 ன்படி பூமியிலே நான் ஒரு பரதேசி. அப்பாவும் இல்லை, அம்மாவும் இல்லை. ஆனால் நான் பாவமன்னிப்பைப் பெற்ற ஒரு பாக்கியவான். அம்மாவுடைய ஆவி பிரியும்வேளை வந்தபோது, அவர்களருகில் முழங்காற்படியிட்டிருந்த நான் இயேசுகிறிஸ்துவை நோக்கி "Dear Jesus, Thou art my father. Thou art my mother" (அன்பின் இயேசுவே, நீரே என் தகப்பன், நீரே என் தாய்) என்று சொன்னேன். இதுவே எனக்கு ஆறுதல். நான் ஊழியம் செய்யவேண்டும் என்று முன்குறிக்கப்பட்டதை அறிந்த என் தாயார் என்னை ஊழியத்திற்குஒப்புக்கொடுத்தது எவ்வளவுநல்லது. அருமைத்தாய்மார்களே, உங்கள்பிள்ளைகளை நீங்கள் கர்த்தருடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா? என் மகன் ஒரு ஊழியக்காரன். அவன் ஆண்டவருக்கு உண்மையாய் ஊழியம் செய்கின்றான்,என்பதே ஓர்பக்தியுள்ளதாய்க்கு மகிழ்ச்சி. அல்லேலூயா.

இயேசுகிறிஸ்து தரிசனம் கொடுக்கிறார்.

எனக்கு மிகவும் பிரியமான என் தாயார் தனது வாலிப நாட்களில் இயேசுகிறிஸ்துவின்மேல் மிகவும் அன்பு கொண்டு கண்களின் இச்சைக்கோ, மாம்ச இச்சைக்கோ இடங்கொடாமல், தன்னைப் பரிசுத்தமாய்க் காத்துக்கொண்டார்களாம். ஒருநாள் அவர்கள் வீட்டை விட்டு வெளியே வரும்போது இயேசுகிறிஸ்து மேகத்தில் இறங்கி வந்தாராம். என் அம்மாவிடம் "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டிருக்கின்றார். அல்லேலூயா. என் அம்மா எவ்வளவு பாக்கியம் பெற்றவர்கள். தேவ தரிசனம் பெற்றவர்களுக்கு உலக ஆசையும் உண்டா? காலம் வந்தபோது எல்லாவற்றையும் வெறுத்து விட்டுவிட்டார்கள். நகைகளினால் தன்னை அலங்கரியாமல், மிகவும் சாதாரணமான உடையை (Always Brown Saree) அணிந்து கொண்டார்கள். அநேக தடவைகள் கல்வாரி தரிசனமும், அன்பின் இயேசு சிலுவையைச் சுமந்து செல்லும் காட்சியையும் கண்டதாகச் சொல்லியிருக்கின்றார்கள். சிலுவை தரிசனம் பெற்றவள் பாக்கியவதியல்லவா?

இயேசுகிறிஸ்து கண்ணீரைத் துடைக்கிறார்:

என் அருமைத் தாயார் அநேக இரவுகளை முழங்காலிலேயே செலவிட்டவர்கள். மணிக்கணக்காக முழங்காலில் அதுவும் நெடு முழங்காலில் நின்று கைகூப்பி ஜெபித்துக் கொண்டேயிருப்பார்கள். நான் அடிக்கடி இரவு 1 மணி, 2 மணி, 3 மணி, 4 மணியளவில் அவர்கள் முழங்காலில் நின்று ஜெபிப்பதைப் பார்த்திருக்கிறேன். குறிப்பாகக் கண்ணீர்வடித்து ஜெபிப்பார்கள். "இயேசுகிறிஸ்து என் ஜெபத்தைக் கேட்டு இதைச் செய்தார்" என்று மகிழ்ச்சியோடு சாட்சி சொல்லுவார்கள். மெய்யாகவே ஜெபத்தைக் கேட்கிற ஜீவனுள்ள தேவன் கண்ணீரைத் துடைத்தார். இனி அவர்களுக்குக் கவலை இல்லை. இனி என் அம்மாவுக்கு வேதனையில்லை. இனி என் அம்மா கண்ணீர் விடவேண்டியதில்லை. இயேசுகிறிஸ்து என் அம்மாவின் கண்ணீரைப் பார்த்து குடும்பத்தில் அநேக அற்புதங்களைச் செய்திருக்கிறார். அநேக ஆசீர்வாதங்கள் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. என் தாயாரின் ஜெபங்களும், விண்ணப்பங்களும், வேண்டுதல்களும், மன்றாட்டுகளும் அடிமை செய்துவந்த, செய்துவருகிற சாட்சியின் ஊழியத்திற்கு பக்க பலமாய் இருந்துவருகின்றது. அருமைத் தாய்மார்களே, நீங்கள் முழங்காலில் நிற்பதை உங்கள் பிள்ளைகள் பார்க்கட்டும். உங்கள் கண்ணீரைக் காணட்டும். மனந்திரும்பட்டும். மெய்யாகவே என் அன்பின் தாயார் நல்ல மாதிரியை எங்களுக்கு வைத்துச் சென்றிருக்கின்றார்கள்.

இயேசுகிறிஸ்து பேசுகிறார்:

இரவு படுக்கைக்குச் செல்லுவதற்கு முன்பு பேனா அல்லது பென்சில், பேப்பர், டார்ச் லைட்டை எடுத்துவைத்துக்கொள்ளுவார்கள். ஒவ்வொருநாளும் ஆண்டவர் இயேசு சொல்லுவதைக்கேட்டு எழுதிவைத்திருக்கிறார்கள். அநேக தரிசன நோட்டுகளையும் வைத்திருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து எவ்வளவு அருமையானவர். என் அப்பாவை 1974-ம் ஆண்டு இழந்தபின்பு அம்மா கவலைப்பட்டபோதெல்லாம் அன்பின் இயேசுவானவர் அவர்களோடு அடிக்கடி பேசி ஆறுதல்படுத்தியிருக்கிறார். கடைசியாக ஆகஸ்டு 12-ம்தேதி அவர்கள் என் அண்ணனிடம் தான் நடக்கமுடியாமல் கஷ்டப்படப்போவதையும், பெலவீனமடையப்போவதையும்குறித்துச் சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டார்கள். உண்மைதான். மூன்றுநாட்களுக்குள் அப்படியே நடந்தும்விட்டது.

அவர்கள் தன்னுடைய வேதாகமத்தில் கடைசியாக எழுதிவைத்திருந்த சில குறிப்புகளைப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! வீட்டில் நடக்கப்போகிறவைகளையும், தனக்கு சம்பவிக்கப்போகிறவைகளையும் எழுதிவைத்திருந்தார்கள். 5-8-1979 அன்று அவர்கள் எழுதினது இதுதான் "என்னுடைய காரியங்களை ஒழுங்காக்கி ஆயத்தப்படுத்துவதுபோல." அவர்கள் பெலவீனமாய்ப் படுத்திருந்த

போது இயேசுகிறிஸ்துஅவர்களிடம் "நீ சனிக்கிழமை மரணமடை வாய் என்று சொன்னாராம். இரண்டாம் தடவையாக நீ வியாழக் கிழமை மரணமடைவாய்" என்று சொல்லியிருக்கிறார். தனக்கு மரணபயம் இல்லை என்று சொன்னார்கள். குறிப்பிட்ட நாளும், நேரமும் வந்தபோது குடும்பத்தார் வராதபடியினால் அடிமை அவர்கள் அருகே இருந்து அவர்களைக் கவனித்துக்கொண்டிருந்தபோது நேரடியாகஅவர்கள் தேவனோடு பேசுவதைக் கேட்டேன். "என்னை அழைத்துக்கொள்ளும்" என்று சொன்னார்கள். மறுபடியும் சில நாட்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. அதை என் காதினால் கேட்டேன். அப்படியே நடந்தது. அல்லேலூயா.

இயேசுகிறிஸ்து பரம வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துகிறார்.

அவர்கள் சுயநினைவை இழப்பதற்கு முன்பு ஓர் விஷயத்தில் தான் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போய்விட்டதாக அறிந்து மிகவும் வியாகுலப்பட்டார்கள். ஓர் வீட்டிற்குச் சென்று அவர்கள் ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கும்போது "நீ இங்கே இருக்க வேண்டாம்" என்று தேவன் பேசியிருக்கிறார். தேவன் பேசியதின் கருத்தைப் புரிந்து கொள்ளாமல் அவர்கள் அங்கே தங்கிவிட்டார்கள். இதை உணர்ந்து, அறிக்கை செய்து ஜெபம் பண்ணிவிட்டார்கள். அதற்குப் பின்பு அவர்களுக்குப் புசிக்கவோ, குடிக்கவோ மனதில்லை. பிள்ளைகளைப்பற்றிய பாசம்கூடக் குறைந்துவிட்டது. "ஆண்டவருக்குச் சித்தமானால் பிள்ளைகளை அவரே கொண்டுவருவார். அவருக்குச் சித்தமானால் அவர் என்னை எடுத்துக்கொள்வார். பிள்ளைகள் பின்பு வரட்டும்" என்று அவர்கள் கூறினார்கள். என்ன ஆச்சரியம்! பாவ அறிக்கை செய்தபின்பு தேவன் பூரணமாய் அவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக அமைதியாய் இருக்கும்படிக் கிருபை செய்தார். தானாக எதுவும் பேசாமல் அமர்ந்து படுத்திருந்தார்கள். திடீரென்று கைகூப்பி ஜெபம் பண்ணுவார்கள். அல்லேலூயா, அல்லேலூயா என்று சொல்லுகிறதை அநேகமுறை கேட்டுக்கொண்டிருந்தோம். 10 நாட்கள் அவர்கள் படுக்கையிலே மிகவும் அமைதியாக இருந்தார்கள். தன் சரீரம் பெலவீனப்பட்டதினாலும், சாப்பிட முடியாமலிருந்ததினாலும், பல கஷ்டங்கள் அவர்களுடைய சரீரத்தில் இருந்தபோதிலும் சங்கீதம் 34:1—ஐ மூன்றுமுறை சொன்னார்கள். "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்". மரணமடைவதற்கு முன்பு அவர்கள் மூன்றும்முறையாக "அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்" என்று சொல்லி முடித்தார்கள். அல்லேலூயா. நீங்களும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை எக்காலத்திலும் ஸ்தோத்திரியுங்கள். இயேசுவைத் துதிக்கும் துதி எப்பொழுதும் உங்கள் வாயில் இருப்பதாக.

இயேசுகிறிஸ்துவின் அன்பு:

இன்று அநேக ஊழியர்களிடம் அன்பைக் காணமுடியவில்லை. தன்சொந்தசகோதரனையோ, சகோதரியையோ, தாயையோ, வயது சென்ற படிக்காத தகப்பனையோ நேசிக்காமலும், அவர்களுக்கு உதவி செய்யாமலும் இருக்கிறார்கள். ஆனால், இயேசு எவ்வளவு அன்புள்ள தேவன். நான் ஆனைமலைத் தேயிலை தோட்டப் பகுதியில் ஊழியங்களை முடித்துவிட்டு, அன்று சிலரை நீதிக்குட்படுத்தும்படி இயேசுகிறிஸ்துவோடு அடக்கம்பண்ணப்படும் ஞானஸ்நானத்தைக் கொடுத்துவிட்டு மூணார் செல்லுவதற்காகப் பொள்ளாச்சி பஸ் ஸ்டாண்டிற்கு வந்தேன். இயேசுகிறிஸ்து அங்கேயே எனக்குத் தரிசனம் கொடுத்து அம்மா தங்கியிருந்த கேத்தி என்ற இடத்திற்கு அனுப்பினார். ஆகையினால், அம்மாவுடைய பெலவீனத்தில் அடிமை அவர்களுக்கு ஆதரவாக உதவிசெய்யும் பாக்கியத்தைப் பெற்றேன். யோசேப்பின் கைகள் யாக்கோபின் கண்களை மூடினதுபோல என் கைகளே என் அன்புத் தாயாரின் கண்களை மூடிவைத்தன. தேவன் தரிசனம் கொடுக்காதிருந்தால் அவர்களின் அடக்கத்தில் பங்குபெறும் பாக்கியம்கூடக் கிடைக்காமல் போயிருக்கும். இயேசுவுக்கு நான் எத்தனை ஸ்தோத்திரங்களைச் செலுத்தினாலும் போதாது. என் தாயார்மீது இயேசுவுக்கு எவ்வளவு அன்பு!

இயேசுகிறிஸ்துவின் இரக்கம்:

கவலைப்படாதே, கலங்காதே, கண்ணீர்விடாதே; திகையாதே என்றெல்லாம் ஆறுதலும், தைரியமும் சொல்லிவருகிற அன்பின் இயேசுகிறிஸ்துவானவர் அம்மாவை மரணத்தின்மூலமாக இழந்த பிள்ளைகளாகிய எங்களுக்கு ஆறுதல் உண்டாகும்படி ஏற்கெனவே தரிசனங்களைஎனக்கும், என்சகோதர, சகோதரிகளுக்கும் கொடுத்தார். ஆகவே "தேவன்தாமே தம்முடைய சித்தத்தின்படியே அம்மாவைத் தம்மோடு சேர்த்துக்கொண்டார்" என்பதே எங்களுக்கு ஆறுதலும், மகிழ்ச்சியுமாயிருக்கிறது. மாத்திரமல்ல, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டு அவருடைய பரிசுத்த ஆவியால் பரிசுத்தமாக்கப்பட்டு வருகிற பலரை எங்கள் வீட்டிற்குத் தேவன் அனுப்பித் தந்தார். கடைசி நாள் இரவு 11 மணி முதல் 2 மணி வரை பாட்டுகளைப் பாடிக்கொண்டும், ஜெபித்துக்கொண்டுமிருந்தோம். அம்மா நல்ல போராட்டத்தைப் போராடி இறுதிஓட்டத்தை முடிப்பதுபோல அவர்கள் மூச்சு இருந்தது. மரிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்குமுன்பு அவர்கள் முகச்சாயல் மாறிற்று. அவர்கள் முகம் மிகவும் அழகாகக் காட்சி அளித்ததாகவும், பிரகாசித்ததாக சிலர் சொல்லக் கேட்டேன். "இன்ப இயேசு ராஜாவை நான் பார்த்தால் போதும்.........மகிமையில் அவரோடு வாழ்ந்தால் போதும்......ஒவ்வொரு காயங்களாக முத்தம் செய்வேன்" என்று சொன்னபோது மகிமை விளங்கிற்று. அல்லேலூயா.

எங்களோடிருந்த ஒரு கர்த்தருடைய பிள்ளையும் அந்த மகிமையைக் கண்டார்கள். அம்மாவின் ஆத்துமா இயேசுகிறிஸ்துவின் காயங்களை முத்தம் செய்வதாகவும், அழைத்துச் செல்லவந்த தேவதூதர்களையும் மேற்குறிப்பிட்ட சகோதரன் கண்டிருக்கின்றார்கள். என் அண்ணான் ஆவியோடும், மிகுந்த சத்தத்தோடும் அல்லேலூயா, அல்லேலூயா என்று ஆர்ப்பரித்து "அம்மா நீங்க போயிடுங்க அம்மா, நாங்களும் வந்திடுவோமம்மா, நாங்கள் எல்லாரும் வந்திடுவோமம்மா. அல்லேலூயா. அல்லேலூயா. அல்லேலூயா" என்று சொன்னார்கள். சிரித்தவண்ணமாய் அப்படியே அம்மாவின் சரீரம் படுத்திருந்தது. உள்ளத்திலே ஆறுதல். இருதயத்தில் மகிழ்ச்சி. ஆவியில் ஆனந்தம். அம்மாவுக்கு இனிப் பாடுகள் இல்லை. அவர்களுக்குக் கவலை இல்லை. அவர்களுக்குப் பெலவீனம் இல்லை. அவர்கள் இயேசுகிறிஸ்துவோடிருக்கிறார்கள். குடும்பமாக அவர்களை மோட்சத்தில் சந்திக்க நாங்களும் ஆயத்தப்படுகிறோம்.

இயேசுகிறிஸ்துவின் மகிமை:

"பரிசுத்தரின் ஓட்டத்தை ஓடி முடித்தேன்" என்று அம்மா சொன்னதாக கிருபைபெற்ற ஓர் சகோதரிக்குக் கர்த்தர் வெளிப்படுத்தியிருக்கிறார். வெண்வஸ்திரம் தரித்த கூட்டத்தில் அம்மாவும் இருப்பதாக மற்றொரு குடும்பத்தாருக்குத் தரிசனம் கிடைத்திருக்கின்றது. அம்மா மரித்தவுடனே ஓர் சகோதரியிடம் "என் மகள் என்னிடத்தில் வந்து இளைப்பாறி மகிழ்ச்சியாயிருக்கிறாள்" என்று கர்த்தர் பேசியிருக்கின்றார். உண்மைதான். எத்தனை மகிமை! எத்தனை மாட்சிமை! அவர்களுடைய மரணத்தைப் பார்த்தவர்கள், கேள்விப்பட்டவர்கள் "எனக்கும் இப்படிப்பட்ட மரணம் வேண்டும்" என்று சொல்லக் கேட்டேன். "......நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக......" (எண். 23:10) பரிசுத்தவானின் மரணம் எனக்கு வருவதாக!

மரணமே உன் கூர்எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? கிறிஸ்து எனக்கு ஜீவன். சாவு எனக்கு ஆதாயம். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் ஜெயம். அல்லேலூயா என்று ஆர்ப்பரிக்கலாமே!

உலகம் வேண்டாம், இயேசு போதும் பாவம் வேண்டாம் இயேசு போதும். ஆடம்பரம் வேண்டாம் இயேசு போதும். ஆஸ்தி வேண்டாம் இயேசு போதும். எந்த நாளிலுமே, எந்நிலையிலுமே, எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே என்று பாடிக்கொண்டேயிருக்கலாமே! ஆமென். அப்படியே நடக்கட்டும். அல்லேலூயா.

என் அன்புத்தாயாரைத் தம்மோடு சேர்த்துக்கொண்ட இயேசு ராஜாவுக்கே துதியும், ஸ்தோத்திரமும், கனமும், மகிமையும் உண்டாவதாக. ஆமென்.

(சாது ஜெபராஜ்

தேவ ஜனத்திற்கு முன்னுவுள்ள ஒளிமயமான எதிர்காலம்

"பாஸ்டர், தேவன்தமது மோட்ச வீட்டிற்கு என்னை அழைத்துக்கொள்ளுவதை இப்பொழுது நான் பெரிதும் விரும்புகின்றேன்" என்று வியாதிப்பட்ட நிலையில் கிடந்த விருத்தாப்பியமானதோர் பக்தியுள்ள மூதாட்டி என்னிடம் கூறினார்கள். அவர்களின் மரணப் படுக்கையண்டை நான் அமர்ந்திருந்தேன். தன்னறிவிழந்த நிலையிலோ அல்லது மிதமிஞ்சிய மருந்துகளை உட்கொண்ட போதை நிலையின் காரணத்தினாலோ அவர்கள் தனது நாவு உளறி இவ்விதமான வார்த்தைகளைப் பிதற்றவில்லை. அந்த அம்மையார் ஆண்டவருடைய உத்தமமான பிள்ளையாவார்கள். கர்த்தராகிய இயேசு இரட்சகரைத் தங்கள் சொந்த மீட்பராக இதயத்தில் ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல, ஒரு ஆழமான கிறிஸ்தவ அனுபவத்தையும், விசுவாசத்தையும் உடையவர்களாயுமிருந்தனர். மோட்சத்தைக்குறித்துப் பரிசுத்த வேதாகமம் கூறியுள்ளதை அப்படியே விசுவாசித்தார்கள்.

மரணத்திற்கப்பாலுள்ள மெய் பாக்கிய ஆனந்த மோட்ச வாழ்வைக்குறித்து அநேக தேவ மக்கள் சொல்லொண்ணு ஆனந்தமுடையோராயிருக்கின்றனர். மோட்சம் இருக்குமா என்று நாம் சந்தேகமுற அவசியமே இல்லை.

"என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" (யோ. 14:2,3) என்று தேவன் விளம்பியுள்ளார்.

விசுவாசிகள் யாவருக்கும் மோட்சம் வாக்களிக்கப்பட்டுள்ளது. பூமியின் மாந்தர் ஒவ்வொருவருக்கும் முன்பாக இரண்டு நித்திய நியமங்கள் (Destinies) உள்ளன. கர்த்தராகிய இயேசுவைத் தங்கள் இதய இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரின் பரிசுத்த பாதையில் செல்லுவோர் யாவருக்கும் மோட்சமும், உலகத்தையும் அதின் ஆசை இச்சைகளையும், சுயத்தையும் தெரிந்து கொண்டு விஸ்தார மார்க்கத்தினில் செல்லுவோருக்கு நித்தியமான தேவ கோபாக்கினையும் காத்திருக்கின்றது.

விசுவாசிக்கு மோட்சம் வாக்களிக்கப்பட்டுள்ளதை அநேக தேவ வசனங்கள் பலமாகச் சுட்டிக்காண்பித்து நிற்கின்றன. "........

தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவை களைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (1 கொரி. 2:9) என்ற தேவ வசனம் நமது உள்ளங்களை மாபெரும் சந்தோஷத்தால் நிரப்புகின்றது.

மோட்சத்தில் அநேக வாசஸ்தலங்கள் (Mansions) இருப்பதாக நாம் வேதத்தின்மூலம் அறிவதினால் நமது மகிழ்ச்சி எல்லை கடந்து செல்லுகின்றது. அவற்றைப் பார்ப்பதற்கும், அவற்றிற்காக ஆவலுடன் காத்திருப்பதற்கும் நமக்குள் பரவச உணர்வு உண்டாகின்றது. மோட்சம், அது எப்படிப்பட்ட வாசஸ்தலம்? அதின் அமைப்பு எப்படி? அதின் அலங்காரக் காட்சிகள் என்ன? இவை யாவற்றையும் நாம்தானே நமக்குள்ளாகச் சிந்தித்துக்கொள்ளும் படியாக ஆவியானவர் நம்மிடமே விட்டுவிட்டார். கிறிஸ்து பெரு மானை இதய நாயகராகக் கொண்டோர் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக ஒவ்வொரு வாசஸ்தலம் கிடைக்கும் என்று திட்டவட்ட மாக நாம் அறிகின்றோம். அதுமாத்திரமல்ல, அவற்றை நிர்மானித் துள்ளவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதை நாம் அறியமுடி கின்றது. "......தேவன்தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங் களுள்ள நகரத்துக்குக் காத்திருந்தான்" (எபி. 11:10) என்று நமது முற்பிதா ஆபிரகாமைக்குறித்துச் சொல்லப்பட்ட வசனம் இதைத் தெளிவுபடுத்துகின்றது.

மோட்சம், சொல்லொண்ணா அழகு மிக்கதோர் இடமாகும். மோட்சத்தில் நம்மைச் சுற்றிலும் அநேக விதமான கண்கவர் வர் ணங்களை (Colours) நாம்காண்போம். அப்படித்தானா? ஆம்! தேவ னுக்கு இவ்விதமான நிறங்களில் அளவற்றவிருப்பமுண்டு. அவரது அற்புதப் படைப்புகளிலே அநேக வண்ணங்களை நாம் காண் கின்றோம்.

"நகரத்து மதில்களின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங் களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன; முதலாம் அஸ்திபாரம் வச் சிரக்கல், இரண்டாவது இந்திர நீலம், மூன்றாவது சந்திரகாந்தம், நான்காவது மரகதம்;

ஐந்தாவது கோமேதகம், ஆறாவது பதுமராகம், ஏழாவது சுவர்ண ரத்தினம், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதாவது புஷ்ப ராகம், பத்தாவது வைடூரியம், பதினோராவது சுநீரம், பன்னிரண் டாவது சுகந்தி இவைகளே." (வெளி. 21:19,20) என்று தேவ னுடைய வார்த்தை கூறுகின்றது. இதிலிருந்து மோட்சத்திலும் ஜொலிக்கும் அழகிய வர்ணங்கள் உண்டு என்பது உறுதி யாகின்றது.

மோட்சம் என்பது இயேசு இரட்சகர் உள்ள இடம். நாம் நித்திய காலமாக இயேசுவுடன் வாழுவோம். நம்முடைய பாவ

ளை க் கோரக் குருசினில் சுமந்து தீர்த்த தேவாட்டுக்குட்டியான வராலேயே மோட்சம் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அந்த அற்புத இரட்சகர் நம்மை மோட்சலோகில் வரவேற்று அலங்காரப் பட்டணத்தின் உள்ளே அழைத்துச் செல்லுவார். நமது வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் மோட்சப் பட்டணத்தைக் குறித்து நாம் கற்பனை செய்து தினமும் ஆனந்தித்து மகிழலாம்: தேவஜனத்திற்குமுன் மோட்சம்என்ற ஒளிமயமானதோர் மாபெரும் எதிர்காலம் உள்ளது. அல்லேலூயா.

Courtesy:- "THE PENTECOSTAL TESTIMONY"

சுவிசேஷத் துண்டுபிரதி ஊழியத்தின் மேன்மை

டோரி (R. A. Torrey) ஒரு சிறந்த தேவஊழியர். 50ஆண்டு காலங்களாக ஒருசுவிசேஷகனுக உலகின் பல்வேறு பகுதிகளிலும் சுற்றித் திரிந்து கர்த்தருக்கென அவர் பணியாற்றியுள்ளார். டோரி ஒரு சிறந்த வேதமாணுக்கர். அநேக அருமையான வேதஆராய்ச்சி நூல்கள் எழுதியுள்ளார். ''How to work for Christ'' என்ற அவரது புத்தகத்திலிருந்து இந்தச் செய்தி இரத்தினச் சுருக்கமாக எடுத்துத் தரப்படுகின்றது.

சுவிசேஷ துண்டுப் பிரதிகளைப் பயன்படுத்திக் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதின் மேன்மையை அறிந்தோர் மிகச் சொற்பமான கிறிஸ்தவர்கள்தான். ஒரு கிறிஸ்தவனுக அநேக ஆண்டு காலங்களாகவும் ஒரு தேவ ஊழியனுகப் பல ஆண்டுகளாகவும் நான் இருந்தபோதினும் இந்த ஊழியத்தின் மேன்மையானது ஒரு காலத்தில் என்னுடைய மூளைக்கும்கூட எட்டாத ஒன்ருகத்தானிருந்தது. இந்தத் துண்டுப் பிரதிகள் யாவும் குப்பை (Rubbish) என்ற மிகத் தவருன எண்ணம் என் உள்ளத்தில் அப்பொழுது இருந்தபடியால் அவற்றை வாசிப்பதோ இல்லையென்ருல் அவற்றை நான் விநியோகிப்பதோ கிடையாது. அந்த வீண் தொல்லை எனக்கெதற்கு என்று நான் எண்ணிக்கொண்டேன். நான் எண்ணியதும், நடந்துகொண்டதும் முற்றும் தப்பறையானது என்பதனைப் பின்னர் நான் கண்டுகொண்டேன். துண்டுப் பிரதி ஊழியம் மற்ற அநேகவித கிறிஸ்தவ ஊழியங்களைவிட மாபெரும் பயன்களைத் தன்னகத்தே வைத்துள்ளது.

1. **துண்டுப் பிரதிகளின் முக்கியத்துவமும் அனுகூலங்களும்.**

1. **எவரும் இவ்வூழியத்தைச் செய்யலாம்:**

கிறிஸ்தவர்களாகிய நம்அனைவருக்கும் பிரசங்கிக்க முடியாது, அல்லது ஆவிக்குரியகூட்டங்களைகூட்டி நடத்தமுடியாது. ஆனல்,

பயனுள்ள அருமையான துண்டுப் பிரதிகளைத் தெரிந்தெடுத்து பி றருக்கு அவற்றைக் கொடுக்கலாம். நமக்குள் சிலர் இதனை மிக சிறப்பான முறையில் செய்யக் கிருபை பெற்றிருக்கலாம். இந் ஊழியத்தைக் கண்ணற்ற சுபோதியும், ஊமையனும்கூடச் செய் லாம். இந்த ஊழியப் பாதையில் ஒவ்வொரு ஆணும், பெண்ணு குழந்தையும் தாராளமாக ஈடுபாடுகொள்ளலாம்.

2. ஒரு துண்டுப்பிரதி ஒருபோதும் கோபம்கொள்ளாது.

ஒருவேளை நீ கோபம்கொள்ளலாம். நான் அநேக கிறிஸ்த ஊழியர்களை அறிவேன். கிறிஸ்தவ வாழ்க்கையில் முன்னேறி சென்ற அம்மக்கள்கூட சில சமயங்களில் நிதானமிழந்து குமுறு கின்றனர். ஆனால், நீ ஒரு கைப்பிரதியைக் கோபமூட்டவியலா அது எப்பொழுதும் அமைதியாகவும், தனது ஒரே கருத்தை நி தடுமாறுமல்கூறிக்கொண்டு ஜூன்மாதக் காலைவேளையைப்போல் அருமையாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கும்.

3 ஒரு துண்டுப் பிரதி பெருமைக்கார மக்களுடன் பேசி அவ களுக்கும் நலங்கூறும்:

அநேகமக்களிடம் அவர்களின் ஆன்ம ஈடேற்றத்தைக்குறித் காரியங்களை நாம் பேசவே முடியாது. அவர்கள் நாம் கூறும் கா யங்களைத் தங்கள் காதில் வாங்கிக்கொள்ளவே மாட்டார்கள். அவ கள் அத்தனை பெருமைக்காரர்களாயிருப்பார்கள். அவர்கள் அத்தன உயர்வாகத் தங்களைக்குறித்து எண்ணிக்கொள்ளுவார்கள். இம்ம களில் ஒரு சிலரோடு அவர்கள் ஆத்துமாவைக்குறித்து நீ பேசினு உன்னை அம்மக்கள் துரத்தியடித்தும்விடுவார்கள். ஆனால், இந் மனிதருடைய மேஜையின்மீதோ அல்லது இவர்களுடையநடமா முள்ளபகுதியிலோ ஒரு துண்டுப் பிரதியை வைத்துவிட்டால் அ அவர்கள் எடுத்து வாசித்து அதின்மூலம் தங்கள் இரட்சிப்பைக்க டடைய வழி பிறந்துவிடுகின்றது.

4. ஒரு துண்டுப்பிரதி ஒரு மனிதனோடு நிலைத்திருக்கும்

ஒருமனிதனோடு அவனது ஆன்ம சம்பந்தமான காரியங்க குறித்து நீ பேசுகின்றாய். அதன்பின்னர் அவன் உன்னைவிட் போய்விடுகின்றான். ஆனால், அவனிடம் கொடுக்கப்பட்ட சுவிசேஷத் துண்டுப் பிரதி அவனோடு செல்லுகின்றது. அது னுடன் ஒட்டிக்கொள்ளுகின்றது.

சில ஆண்டு காலத்திற்கு முன்னர் ஒரு மனிதன் நியூயா நகரத்திலுள்ள ஒரு கிறிஸ்தவ மிஷன் ஸ்தாபனத்திற்கு வந்தா அங்குள்ள தேவனுடைய பிள்ளைகளில் ஒருவர் அந்த மனித இரட்சிப்புக்கடுத்த காரியங்களைப் பேசினார். ஆனால் அம்மனி அதற்குச் செவிகொடுக்கவில்லை. அந்த மனிதன் மிஷன் னத்தைவிட்டுப் புறப்பட்டுச் செல்லுகையில் ஒரு துண்டுப் பிர

கார்டு (A Card Tract) அவனுடைய கரத்தில் வைக்கப்பட்டது. "இன்று இரவில் நான் மரிப்பேனுனல்.......................க்குச் செல்லுவேன்" என்று அதில் எழுதப்பட்டிருந்தது. "தயவுசெய்து காலியிடத்தைப்பூர்த்திசெய்து உங்கள் கையொப்பத்துடன் அனுப்பி வையுங்கள்" என்றும் அதில் எழுதியிருந்தது. அந்தக் கார்டை அவன் தனது சட்டைப் பையில் போட்டுக்கொண்டு தனது கப்பலுக்குச் சென்றுவிட்டான். அவன் ஒரு கப்பல் மாலுமி. அவனது கப்பல் லிவர்பூலுக்குச் சென்றுகொண்டிருந்தது, தனக்குக் கொடுக்கப்பட்ட அந்தக்கார்டை கப்பல்அறையிலுள்ள ஒதுக்கிடம் (Bunk) ஒன்றில் அவன் வைத்திருந்தான். எதிர்பாராதவிதமாக அக்கப்பலில் ஏற்பட்ட விபத்தொன்றில் அவன் சிக்குண்டு ஆபத்தானநிலையில்மேலேகுறிப்பிடப்பட்ட ஒதுக்கிடத்தில் வைக்கப்பட்டிருந்தான். அவன் அங்கிருந்த நாட்களில் அவனுல் வைக்கப்பட்டிருந்த துண்டுப் பிரதிக் கார்டு இராப்பகலாக அவனது கண்களில் தென்பட்டுக் கொண்டிருந்தது. கடைசியாக அவன் "இன்று இராக்காலம் நான் மரிப்பேனுனல் நிச்சயமாக எரி நரகத்திற்குத்தான் செல்லுவேன். ஆனால், அங்கு நான் போகப்போவதில்லை, இயேசுவை இன்றே இப்பொழுதே என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுவேன்" என்று தனக்குள் கூறி ஆண்டவரை இதய இரட்சகராக ஏற்றுக் கொண்டுவிட்டான். விபத்தில் சிக்குண்டிருந்த அவனது ஜீவன் கர்த்தரால் அதிசயமாகப் பாதுகாக்கப்பட்டது. லிவர்பூல் சென்றுவிட்டு மீண்டும் நியூயார்க் வந்து நேராக அந்த மிஷன் ஸ்தாபனத்திற்குச்சென்று தனது சட்டைப்பையில் இன்னும் பத்திரமாகவைத்திருந்த அந்தக் கார்டைஎடுத்து "இன்று இரவில் நான் மரிப்பேனுனல் மோட்சத்திற்குச் செல்லுவேன்" என்று மனமகிழ்ச்சியுடன் நிரப்பித் தனது கையொப்பத்தையும் வைத்துக் கொடுத்தான். மிஷன் ஸ்தாபனத்தினர் தன்னுடன் செய்த சம்பாஷணையை அவன் மறந்துவிட்டான். ஆனால், அவனுக்குக் கையளிக்கப்பட்ட துண்டுப் பிரதி அவனுடன் தரித்துநின்று பெரிய காரியத்தைச் சாதித்துவிட்டது.

5. துண்டுப்பிரதிகள் அநேகரை ஆண்டவருக்குள் வழி நடத்தும்.

"கிறிஸ்து இரட்சகரில் விசுவாசம் வைப்பது என்பது யாது?" என்ற துண்டுப்பிரதியின் ஆக்கியோன் தமது மரணகால பரியந்தம் 1600 மக்கள் அவர் எழுதிய மேற்குறிப்பிடப்பட்டுள்ள துண்டுப்பிரதியை வாசித்ததின்மூலம் இயேசுவைத் தங்கள் சொந்தஇரட்சகராக ஏற்றுக்கொண்டதாக எழுதியிருந்த கடிதங்களைப் பெற்றிருந்தார்.

2. துண்டுப்பிரதிகளை எவ்விதம் பயன்படுத்துவது?

ஒரு சம்பாஷணையை ஆரம்பிப்பதற்கு:

தேவனுடைய ஊழியத்தில் ஒரு கஷ்டம் யாதெனில் சம்பாஷ

ஊையைத் துவக்குவதுதான். நீ ஒரு மனிதனைக் காண்கின்றாய். அந்த ஆளிடம் அவரது ஆத்தும இரட்சிப்பைக் குறித்து நீ பேச விரும்புகின்றாய். இதில் ஒரு பெரிய சிக்கல் யாதெனில் அவரிடம் பேச்சை எப்படித் தொடங்குவது என்பதுதான். தொடங்கிவிட்டால் அதற்கப்பால் எல்லாம் இலகுவாகிவிடும். இவ்விதமாகச் சம்பாஷணையை ஒரு ஆளிடம் ஆரம்பிப்பதற்கு மிகவும் எளியமுறை துண்டுப்பிரதி ஒன்றைக் கொடுப்பதுதான். துண்டுப்பிரதியைப் பெற்றுக்கொண்டவர், தான் படித்துமுடித்ததும், தானாகவே சம்பாஷணையைத் துவக்கிவிடுவார். ஒரு சமயம் நான் ஒரு இட நெருக்கடியான காரில் பயணம் செய்து கொண்டிருந்தேன். காரில் யாரை யாவது ஒரு ஆளை ஆண்டவரிடம் வழிநடத்தக் கர்த்தர் கிருபை தரும்படியாகக் காரில் இருந்து கொண்டே நான் ஜெபித்தேன். அதற்கான சந்தர்ப்பத்தையும் நான் எதிர்நோக்கிக் கொண்டிருந்தேன். சற்றுநேரத்தில் இரண்டு பெண்கள் நான் உட்கார்ந்திருந்த காரில் ஏறினர். அவர்களில் ஒரு பெண்ணை நான் அறிவேன். அவள் ஒரு குருவானவரின் மகள். அவள் எனக்குமுன்பாக வந்து உட்கார்ந்தாள். என்னுடைய துண்டுப்பிரதிகளின் கட்டை எடுத்து அவளுக்கு ஏற்ற ஒரு பிரதியைத் தெரிந்தெடுத்து அவள் கரங்களில் கொடுத்துக் கர்த்தர் அதனை ஆசீர்வதிக்க ஜெபித்துக் கொண்டிருந்தேன். அவள் படிக்கத் தொடங்கினாள், நான் ஜெபிக்கத் தொடங்கினேன். துண்டுப்பிரதியைப் படித்துமுடித்ததும், அதைக் குறித்து அவள் நினைப்பது என்ன என்று நான் அவளிடம் வினவினேன். அவ்வளவுதான், அந்தக் காரிலேயே அவள் கண்ணீர் சிந்தி ஏங்கி அழ ஆரம்பித்துவிட்டாள். மாத்திரமல்ல, கர்த்தராகிய இயேசுவையும் அங்குதானே தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டும்விட்டாள். அவள் காரைவிட்டு இறங்கிச் செல்லுகையில் "ஐயா, நீங்கள் என்னை ஆண்டவரண்டை வழிநடத்தியதற்காக உங்களுக்கு மிகுந்த நன்றி" என்றுகூறிக் கடந்து சென்றாள்.

2 ஒரு **சம்பாஷணையின் முடிவில் துண்டுப் பிரதியைக் கொடு:**

எவரிடத்தில் ஆத்தும இரட்சிப்பைக் குறித்துப் பேசினாலும் சரிதான், உனது சம்பாஷணையின் முடிவில் அந்த மனிதனிடம் ஒரு துண்டுப் பிரதியை மறவாது கொடுத்துவிடு. நீ சந்தித்த நபர் உனதுசந்திப்பின்மூலம் ஆண்டவரைத் தனது சொந்தஇரட்சகராக ஏற்றுக்கொண்டுவிட்டால், கிறிஸ்தவ ஜீவியத்தில் தொடர்ந்து அந்தஆத்துமா முன்னேறிச் செல்லத்தக்க அனுகூலமான துண்டுப்பிரதிகளைக்கொடு. அந்த ஆத்துமா உனது சம்பாஷணையின்மூலம் ஆண்டவருக்கென்று பிடிபடாமலிருந்தால் இரட்சிப்பின் அவசியத்தைத் திட்டமாக வலியுறுத்தும் ஒரு துண்டுப் பிரதியைக் கொடுத்தனுப்பு.

தூரமான இடங்களிலுள்ள மக்களுக்குத் துண்டுப்பிரதிகளை அனுப்பு:

ஒரு துண்டுப் பிரதியானது பிரயாணம் செய்வதற்கு அதிகமாக ...றும் செலவழிக்கவேண்டியதில்லை. சில பைசாக்கள் மாத்திரம் செலவுபண்ணினால் போதும் அது பூமியின் கடைமுனைமட்டும் ...றுவிடும். தேவனுடைய சுவிசேஷத்தையும், பிரசங்கங்களை கேட்கமுடியாமல் வெகு தூரமான இடங்களில் இருக்கும் மக்க...க்கு நீ துண்டுப்பிரதிகளைக் கடிதங்களுடன் இணைத்தோ அல்லது ...னித்தோ தபாலில் அனுப்பலாம்.

அநேக ஆயிரக்கணக்கான மக்கள் வெகு தொலைவான இடங்...ில் ஜீவிக்கின்றனர். அவர்களிடம் ஒரு சுவிசேஷகனைப் பிரசங்...வதற்கு அனுப்புதல் கூடாத காரியம். ஆனால், ஒரு துண்டுப் ...தி ஒரு சுவிசேஷகனின் பணியை முடிவின்றிச் செய்து ...ண்டே இருக்கும். ஒரு பிரசங்கத்தின் மூலமாகவோ அல்லது ...னித்தாள் ஊழியத்தின் மூலமாகவோ மனந்திரும்பாத ஒரு ஆத்... அநேகமாக ஒரு துண்டுப்பிரதியின் மூலமாக மனந்திரும்பி...கின்றது. துண்டுப்பிரதிகள் மூலமாகக் கர்த்தரைக் கண்ட...ந்தோர் அனந்தம், அனந்தம்.

துண்டுப்பிரதிகளை விநியோகிப்போருக்குச் சில ஆலோசனைகள்.

நீ விநியோகிக்கும் துண்டுப்பிரதிகளை மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு முன்னர் முதலாவது நீயே அவற்றைப் படித்துப்பார்.

...கைப்பிரதி ஊழியத்தில் இது மிகவும் முக்கியமானது. பயனற்...தும், கொடிய தீங்கை விளைவிப்பதும் தப்பறையான துர் உபதே...ங்களைக் கொண்டதுமான துண்டுப்பிரதிகள் திரளாக மலிந்துகிடக்...் காலமிது. இலட்சக்கணக்கான எண்ணிக்கையில் இலவசமாக ...வைகள் இன்று விநியோகத்தில் உள்ளன. துண்டுப்பிரதிகளைக் ...டுப்போர் இதனை மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்கவேண்...ும். அப்படியில்லாத பட்சத்தில் நன்மைக்குப் பதில் பெரும் தீங்கு உண்டாகிவிடும். நீ விநியோகிக்கும் துண்டுப்பிரதிகளை முதலா...து நீ படித்திருக்க வேண்டும். நீ கொடுக்கும் பிறமொழித் துண்...ப்பிரதிகளையும்கூட அம்மொழிகளை அறிந்தவர்களிடம் கொடுத்து ...மொழிபெயர்ப்புச் செய்து கருத்தைப் புரிந்து கொள்ளத் தவறக்...ாது. இல்லையெனில் நாம் நன்மைக்குப் பதில் தீமையைத் ...ன் செய்து கொண்டிருப்போம்.

பலதரப்பட்ட துண்டுப் பிரதிகளை நீ எப்பொழுதும் உன்னுடன எடுத்துச் செல்

...சில துண்டுப் பிரதிகள் சிலருக்கு நன்மையளிக்கும். ஆனால் ...் பிரதிகள் மற்றவர்களுக்கு நன்மையளிக்கக் கூடாததாயிருக்...

கும். நீ சந்திக்கும் ஆட்களுக்கேற்ற துண்டுப் பிரதிகளைக் தெரி எண்ணிக்கைக்கடங்காத எத்தனை விதமான துண்டுப் பிரதிகள் உள்ளன. அவற்றில் ஏராளம் பயனற்றவைகள்தான். ஆனால், அவைகளில் ஆத்தும ஆதாயத்திற்குப் பயன் உள்ளவைகளை பொறுக்கிக் கோர்வைப்படுத்தி வித்தியாசமான வயது, மன நிலை சூழ்நிலைகளின்படி நீ சந்திக்கும் நபர்களிடம் பொறுத்தமான துண்டுப்பிரதிகளை வழங்கு.

3 துண்டுப்பிரதிகளைக் கோடிட்டுக் கொடு.

மனிதன் ஞானமுள்ளவன். காரியங்களைக் கருத்தாய் கவனித்துப்பார்க்கக்கூடிய யூகமுள்ளவன். எனவே, நீ கொடுக்கும் துண்டுப்பிரதிகளின் சில முக்கியமான, ஆத்துமாவைத் தொடக்கூடிய வாக்கியங்களைக் கோடிட்டுக் (Underscored) கொடு. அந்த வாக்கியங்களை அதிமுக்கியமாக மனிதர்கவனித்து ஆராய்ந்துபார்ப்பார்கள். நீ அலுவலகத்தில் பணிபுரிபவனானால் உனது மேஜைமீது, சில நல்ல, பயனுள்ள துண்டுப் பிரதிகளை வைத்துக்கொள். உனது அலுவலகத்திற்கு வருவோர் அதின்மூலம் நித்திய பயன் பெறுவர்.

4 தேவனுடைய ஒத்தாசையைத் தேடு.

தேவனுடைய ஊழியத்தில் இதுதான் மகா முக்கியமானது. துண்டுப்பிரதிகளை நாம் மக்களுக்கேற்றபடிப் பொறுக்கி எடுப்பதிலும், ஏற்ற கரங்களில் அவைகளைக் கொடுப்பதற்கும் பரத்திலிருந்து நமக்கு ஞானம் வேண்டும். நம்முடைய மனுஷீக ஞானத்தில் இவற்றைச் செய்யத் துணிதல் ஒருபோதும் ஆசீர்வாதம் தராது.

5 கொடுக்கப்பட்டத் துண்டுப்பிரதிகளைக் கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபி.

ஏதோ கடமைக்காகத் துண்டுப்பிரதிகளைக் கொடுக்காதே. ஒவ்வொரு கைப்பிரதியையும் ஜெபத்துடன் கொடுப்பதுடன், கொடுத்தபின்னரும் கர்த்தர் அப்பிரதியை ஆசீர்வதிக்க நீ கண்டிப்பாக ஜெபித்தல் வேண்டும். பிரதிகளைக் கொடுத்ததுடன் உன் காரியம் முற்றுப்பெறவில்லை என்பதை மறக்கவேண்டாம்.

6. துண்டுப்பிரதிகளைக் கொடுப்பதில் ஒருபோதும் வெட்கமடையாதே.

அநேகர் துண்டுப்பிரதிகளைக் கொடுக்கும்போது, தாங்கள் செய்யும் காரியம் வெட்கத்திற்குரியது என்பதைக் காண்பிப்பது போல வெட்கத்துடன் கொடுப்பதை நாம் காண்கின்றோம். நீ செய்யும் காரியம் உனக்கே வெட்கமாயிருக்கும்போது அதனைப் பெறுபவரும் வாசித்துப் பயனடைய யோசித்து நிற்பர். நீ துண்டுப்பிரதியைக் கொடுக்கும் ஆத்துமாவுக்கு ஒரு பெரிய உபகாரத்தைச் செய்வதாக மனதில் எண்ணி மன உற்சாகத்தோடும், தைரியத்தோடும் உன் ஊழியத்தைச் செய். ஒவ்வொரு பிரதியையும் மக்களின் கர

சுந்தர் பகிர்ந்துகொண்ட அனுபவங்கள்.

கைலாச பர்வதத்திற்குச் செல்லும் வழியைப்பற்றி நான் இங்கு எழுதுகின்றேன். ஒருநாள் இவ்வழியாகச் சென்று கொண்டிருந்த நான் கொடிய காய்ச்சலால் பிடிக்கப்பட்டு நடக்க இயலாத நிலைக்குள்ளானேன். நான் தாமதித்து ஓய்வு பெற்றுச்செல்ல அங்கு எவ்வித விடுதிகளும், வீடுகளும் இல்லை. எனது இரத்தம் முழுமையும் இரத்த நாளங்களில் உறைந்து போகக்கூடிய அளவிற்கு கொடிய பனிக்காற்று அப்பொழுது வீசிக்கொண்டிருந்தது. என்னுடன் நண்பர்களோ, வழித்துணையோ யாருமில்லை. இவ்விதமான சூழ்நிலையில் நான் ஏழு மைல்கள் தூரம் செங்குத்தாக ஒரு மலை ஏற வேண்டியதாயிருந்தது. பசியும், தாகமும் என்னை வாட்டினது. என்னுடன் நான் மருந்து எதனையும் எடுத்தும் செல்லவில்லை. ஆண்டவரிடம் நான் என் ஜெபங்களை ஏறெடுத்துவிட்டு அந்தச் செங்குத்தான மலைமீது ஏறத்தொடங்கினேன். எனது அகோரக் காய்ச்சலுக்கு மத்தியில் நான் இவ்விதமாகச் செய்தபடியால் என் சரீரம் முழுமையும் வியர்த்துக் கொட்டி நான் அணிந்திருந்த என் வஸ்திரங்கள் எல்லாம் நனைந்துபோயிற்று. அந்த ஏழு மைல்கள் உயரத்தையும் நான் ஏறிக் கடந்ததும் என்னைப் பிடித்திருந்த காய்ச்சல் முற்றும் என்னைவிட்டுப் போய்விட்டது. நான் பூரண சுகத்துடன் காணப்பட்டேன். செங்குத்தான அந்த மலையை நான் ஏறிக் கடந்து செல்லுகையில் நான் எடுத்துக்கொண்ட நீண்ட மூச்சுகளின்போது காய்ச்சல் என்னைவிட்டுப் போயிற்று. அந்தக் காய்ச்சலின் காரணமாக நான் படுக்கையில் படுத்து மருந்துகள் எடுத்துக்கொண்டிருப்பேனானால் எத்தனை நாட்கள் அது என்னை உபத்திரவப்படுத்தியிருக்குமோ ஆண்டவருக்குத்தான் தெரியும்.

என்னுடைய பயணத்தின் நாட்கள் ஒன்றில் கனுய் என்றதோர் கிராமத்திற்கு நான் வந்துசேர்ந்தேன். அந்தக் கிராமத்திற்கு நான் வந்துசேர்ந்த நாளில் ஒரு பெரிய திருவிழா அங்கு நடந்துகொண்டிருந்தது. சில ஜனங்கள் கொக்கி போன்றதோர் கூர்மையான கத்தியைக் கொண்டு ஒரு எருமைக் கடாவைக் காயப்படுத்திக்கொண்டிருந்ததை நான் கண்ணுற்றேன். அந்தக் காயங்களிலிருந்து இரத்தம் தாராளமாகக் கொட்டிக் கொண்டிருந்தது அக்

களில் கொடுக்கும்போது ஜெப சிந்தையோடும், ஆத்ம பாரத்தோடும் "இதோ நீங்கள் வாசிக்கத் தகுந்ததானதோர் துண்டுப்பிரதி. இதின்மூலம் நான் மிகுதியும் நன்மை பெற்றுள்ளேன். நீங்களும் அந்த நன்மையைப் பெற விரும்புகின்றேன்" என்று சொல்லிக் கொடு.

கொடிய ஜனங்கள் எருமைக் கடாவின் காயங்களில் சிவந்த மிள காய்ப் பொடித்தூளை நன்கு திணித்துவிட்டனர். காயத்தின் ஊனங் களாலும், மிளகாய்ப் பொடியின் கடுமையான சகிக்கமுடியாத எரிச் சலின் காரணமாகவும் அந்த அப்பாவி மிருகம் துடி, துடித்து இங்கு மங்கும் வெறிபிடித்ததைப்போலத் துள்ளிக் கதறி ஓடிக்கொண்டி ருந்தது. அதினுடைய நாக்கு நீளமாக வெளியே தொங்கிக் கொண் டிருந்தது. ஆனால், கொடியரான அம்மக்கள் இந்தச் சகிக்கவொண் ணாத காட்சியைக் கண்டு ஆனந்தித்துக் கொண்டிருந்தனர். எரு மைக் கடாவிற்கு இவ்விதமாகச் செய்வதின் மூலம் தங்கள் பாவங் கள் மன்னிக்கப்படுவதாக அவர்கள் கருதினர்.

எருமைக் கடா அங்குமிங்கும் ஓடி மிகுதியான இரத்தம் கொட் டுண்டதன் காரணமாகக் களைப்புற்று பூமியிலே விழுந்தபோது அம் மக்கள் தடிகளால் அதனை அடித்துக் கொன்று அதின் இரத்தத்தைத் தங்கள் குலதெய்வத்திற்குக் காணிக்கையாகப் படைத்தனர். இந் தத் துயரக் காட்சியை நான் கண்டபோது கர்த்தராகிய இயேசு இரட்சகரின் சிலுவை மரணக் காட்சியே என் கண்களுக்குமுன் வந்தது. ஆடுகள், வெள்ளாடுகள், எருமைக் கடாவின் இரத்தத் தின் மூலமாக அல்ல, தேவ மைந்தனின் திரு இரத்தத்தாலேயே நாம் இரட்சிப்பைக் கண்டடைந்தோம். இந்தத் திருவிழாவில் கூடி வந்த மக்களுக்குத் தேவனது சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நல்ல தோர் வாய்ப்பு எனக்குக் கிட்டினது.

காட்டு ஆடுகளும், காட்டு நாய்களும், காட்டுக் குதிரைகளும் இங்குள்ள மலைகளிலும், தீபெத் பீடபூமியிலும் இருப்பதாக நான் முதன் முதலாகக் கேள்விப்பட்டேன். இது எனக்கு மிகுந்த ஆச்சரி யத்தைக் கொடுத்தது. ஆனால், நான் அஸ்கோட் என்ற இடத்திற்கு நேராகச் சென்றபோது கூட்டம், கூட்டமாகக் காட்டு மனிதர்களும் அங்கு வாழ்வதாகக் கேள்விப்பட்டேன். இவ்வித காட்டு மனிதர் கள் வாழும் அஸ்கோட் என்ற இடமானது அல்மோரா (Almora) என்ற இடத்திலிருந்து 20 மைல்கள் தொலைவிலிருக்கின்றது. நான் இந்த ஜனங்களண்டை சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன்.

இம்மக்கள் பார்ப்பதற்கும் காட்டுமிராண்டிகளைப்போலவே தோன்றினர். நிர்வாணத்தை மறைப்பதற்காக இடுப்பைச் சுற்றி லும் ஒரு துண்டுத்துணியை மாத்திரம் இவர்கள் அணிந்திருந்தனர். மரங்களினால் சிறிய மரச்சாமான்கள் செய்து இவர்கள் விற்கின்ற னர். இவர்களில் சிலர் துணிகள் அணிய ஆரம்பித்துள்ளனர். ஆனால், நாம் சற்றுதூரம் அடர்ந்த கானகத்தினுள் முன்னேறிச் சென்று பார்ப்போமானால் நூதனமான காரியங்களை நாம் காண லாம். நான் தனிமையாகவே அந்தக் காட்டினுக்குள் சென்றேன். சற்றுநேரம் சென்றதன் பின்னர் ஒரு ஆணும், ஒரு பெண்ணும், நான்கு பிள்ளைகளும் ஒரு குகையைவிட்டு வெளியே வந்தார்கள்.

அவர்கள் என்னைக் கண்டதும் வெகு வேகமாக, சொல்லப்போனல் ஒரு குதிரையின் ஓடும் வேகத்தைக் காட்டிலும் விரைவாக ஓடி மறைந்துவிட்டனர். அவர்கள் தங்கள் சரீரங்களில் முடியை நீள நீள வளர்த்துப் போட்டிருந்தனர். அவர்கள் கருமையான நிறத்த வர்களாயிருந்தனர். முற்றும் நிர்வாணிகளாகவே இவர்களிருந்தனர். இந்தக் காட்டு மனிதர்கள் சற்று நாகரீகமடைந்த குடியிருப்புப் பகுதிகளுக்கோ, கிராமங்களண்டையிலோ வரப் பெரிதும் அஞ்சி மைல்கள் தொலைவில் வாழ்கின்றனர். அம்மக்கள் என்னைக் காணவும் ஓடி மறைகின்ற காரணத்தால் நான் திரும்பிவந்து பகுதி காட்டு மனிதனும், பகுதி சற்று முன்னேற்றமடைந்தவனுமான அம்மக்களில் ஒருவனை எனது மொழிபெயர்ப்பாளனுகத் தெரிந்து கூட்டிக்கொண்டு மீண்டும் அடர்ந்த கானகம் நோக்கிச் சென்றேன்.

சில காட்டுமனிதர்களும், காட்டு மனுஷிகளும், பிள்ளைகளும் குடியிருந்துகொண்டிருந்த ஒரு குகைக்கு அவன் என்னை அழைத்துச்சென்றுன். அவர்கள் என்னைக் காணவும் ஓடுவதற்கு ஆயத்த மானுர்கள். ஆனுல், என்னை அழைத்துக்கொண்டு சென்ற பகுதி காட்டுமனிதனுன கொக்ரா என்ற அவன் அவர்கள் அப்படி பயந்து ஓட அவசியமில்லையென்றும், அம்மக்களைப் பிடித்துகொண்டுசெல்ல நான் வரவில்லையென்றும் அவர்களிடம் சொல்லவே அவர்கள் அமைதியாக அமர்ந்திருந்தனர். இந்த மக்கள் ஜீவித்துக்கொண்டிருந்தஅந்தக் குகையின்அடிப்பரப்பு புற்களால்நிரப்பப்பட்டிருந்தன. காட்டுப்பழங்கள், தாவரங்கள், மரங்களின் கிழங்குகளையே அவர்கள் தின்று உயிர் வாழ்கின்றனர். தட்டையான நீண்ட பற்கள் அவர்களுக்கிருக்கின்றன. காட்டு விலங்குகளுக்கு இவர்கள் அஞ்சுவதே கிடையாது. தங்கள் அண்டை வீட்டுக்காரர்களைப்போன்றும் தங்கள் கூட்டாளிகளைப்போலவும் காட்டு விலங்குகளை அவர்கள் கருதுகின்றனர். சில சமயங்களில் புலிகள் போன்ற துஷ்ட விலங்குகள் இம்மக்களை அடித்துப் புசிக்கின்றன. அதேபோன்று இம்மக்களும் அவைகளைக் கொன்று தின்கின்றனர்

இரட்சண்ய சேனையினர் (Salvation Army) இம்மக்களின் நலனில் அக்கறைகொண்டு சில நன்மையான காரியங்களை சில ஆண்டுகளுக்குமுன்னர் செய்ததாக நான் கேள்விப்பட்டேன். இக் காட்டுமக்களின் பழக்கவழக்கங்கள் மிகவும் அநாகரீகமானதாயுள்ளன. தகப்பன் தன் சொந்த மகளையும், சகோதரன் தன் உடன் பிறந்த சகோதரியையும் மணம் புரிந்துகொள்ளலாம். குழந்தை பிறந்தால் அதினைக் கழுவிச் சுத்தம்செய்யக்கூடாது. அதின் தாய் தன்னுடைய நாக்கினுல் நக்கித் தனது குழந்தையைச் சுத்தம்செய்ய வேண்டும்.

நான் வஸ்திரங்கள் அணிந்துள்ளதைப் பார்த்துக் காட்டு மனிதன் ஒருவன் பலமாகச் சிரித்துவிட்டு நான் கூட்டிச்சென்ற

மொழிபெயர்ப்பாளனான [illegible]விடம் நான் ஒரு அதிசய ம[illegible] என்றும், [illegible] சுற்றிக் கட்டியிருப்பதனும் [illegible] எவ்வித [illegible]வும் [illegible]தில்லையா என்றும் [illegible].

ஒன்றை அனுமானிக்கவோ, அல்லது ஆராய்ந்து நிதா[illegible]கவோ இம்மக்களுக்கு அறிவாற்றல் கிடையாது எனினும், [illegible] ஒருவர் உண்டென்கின்ற நம்பிக்கை இவர்களுக்கிருக்கின்[illegible] ஆயினும், ஜீவனுள்ள தேவன் ஒருவர் உண்டு என்பதை[illegible] ஞானம் இவர்களுக்கில்லை. நல்ல உயரமான, அழகான கல் ஒன்[illegible] இம்மக்கள் நிறுத்தி அதனைத் தெய்வமாக வழிபடுகின்றனர். [illegible]தீகன், கடவுள் ஒருவர் உண்டு என்ற எண்ணமே இல்லாம[illegible] வாய்க்கு வந்தபடி எதையோ பேசி உளறுகின்றான். ஆனா[illegible]வுள் ஒருவர் உண்டு என்பதைக் கல்வி ஞானமற்ற காட்டுமிரா[illegible]கள் உணருவது மாத்திரமல்ல அந்தக்கடவுள் வணக்கத்திற்குரி[illegible] என்றும் கண்டிருக்கின்றனர். எத்தனை ஆச்சரியம்!

இக்காட்டு மக்கள்மத்தியில் சில நாட்கள் நான் தங்கி[illegible] விரும்பினேன். ஆனால், அம்மக்கள் என் அருகில்வரவே அஞ்சி[illegible] அதுமட்டுமல்ல, நான் வந்திருப்பதைக் கேள்வியுற்று அநேக[illegible]கள் குகைகளை விட்டு, விட்டு வேறு குகைகளுக்கு ஓடிச் [illegible] விட்டதாகவும் நான் கேள்விப்பட்டேன். எனவே அவர்கள் ம[illegible] தொடர்ந்து நான் தங்கி சுவிசேஷத்தை அறிவிக்க வாய்ப்பி[illegible] போய்விட்டது.

தேவ எக்காளம்

ஆன்ம ஈடேற்றத்திற்கெனப் பிரசுரமாகும் ஓர் ஆவிக்குரிய மா[illegible]திர வெளியீடு. இது இப்பூவுலகின் எந்த ஒரு சபைப்பிரிவை[illegible] சார்ந்த ஒரு பத்திரிகையல்ல. பத்திரிகையின் ஆண்டுச் சந்தா ரூ[illegible] மட்டுமே. அனுப்பவேண்டிய முகவரி:

DEVA EKKALAM,
Kotagiri P. O: - 643217
Nilgiris, S. India

என் ஆத்துமாவே, அமர்ந்திரு! கலங்கி அழாதே
எல்லாவற்றையும் காணும் கண்களுக்கு முன்பாக
உன் வெறுமையான பாழ் வனாந்தரத்தை விரித்து வை.
காத்திரு! நம்பிக்கையிழந்து போவதுபோல் தோன்றினும்
தேவன் வந்து உனக்காய்ப் பரிதபித்து உன் வறண்ட பூமியை
ஒளி, ஜீவன், புதிய ஆகாயம் இவற்றால் நிரப்புவார்.

ஜே சி. [illegible]

Printed at the Thoothan Press, Newport Street, Nager[illegible]
Published by the Editor N. Samuel, Kotagiri-643217, Nilgi[illegible]